**இராஜபாளையம் நகராட்சி**

**31.10.2018**

திருவள்ளுவர் ஆண்டு 2047 விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 14ம் தேதி 2018ம் வருடம் அக்டோபர் மாதம் 31 ம் தேதி புதன் கிழமை இந்நகராட்சியின் பி.எஸ்.குமாரசாமி ராஜா நினைவுக் கூட்ட மண்டபத்தில் காலை 11.00 மணிக்கு இந்நகர்மன்றத்தின் அவசரக்கூட்ட நடவடிக்கைகள்

**வருகை— திரு.க.சரவணன், பி.எஸ்.சி., தனி அலுவலர்**

**1)** இந்நகராட்சி பகுதியில் உள்ள 42 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கொசு உற்பத்தி இடங்களை கண்டறிதல் குறித்த வருடாந்திர காலண்டர் அச்சடிக்க கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

மேற்படி ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( எச்1/5899/18)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டு தொகை மற்றும் விபரம் |
|---|---|---|
| 1. | தூத்துக்குடி மாவட்ட ஹைடெக் பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி | 1) வருடாந்திர காலண்டர் ஸ்டிக்கர் 1 எண்ணம் ரூ 4.25<br>2) கொசுபுழு இல்லா இல்லம் ஸ்டிக்கர் 1 எண்ணம் ரூ 2.50 |
| 2. | கோவில்பட்டி சிறு தொழில் கோ.ஆப்.சொசைட்டி கோவில்பட்டி | 1) வருடாந்திர காலண்டர் ஸ்டிக்கர் 1 எண்ணம் ரூ 4.10<br>2) கொசுபுழு இல்லா இல்லம் ஸ்டிக்கர் 1 எண்ணம் ரூ 2.20 |
| 3. | சிவகாசி பிரிண்டிங் சர்வீஸ்<br>கோ.ஆப்.சொசைட்டி<br>சிவகாசி | 1) வருடாந்திர காலண்டர் ஸ்டிக்கர் 1 எண்ணம் ரூ 3.60<br>2) கொசுபுழு இல்லா இல்லம் ஸ்டிக்கர் 1 எண்ணம் ரூ 2.00 |

அ.கு—

**1.** மன்றம் அனுமதிக்கலாம்

2. வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள சிவகாசி பிரிண்டிங் சர்வீஸ் , சிவகாசி நிறுவனத்தாரருக்கு வேலை உத்திரவு வழங்கவும் , மேற்படி பணிகள் அவசர அவசியம் என்பதால் மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.722அனுமதிக்கப்பட்டது.**

**2** ) இராஜபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் டி.என்.**67** W 6557 குடிநீர் லாரி தகுதிச்சான்றிதழ் பெறும் பொருட்டு பழுது மற்றும் பராமதிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.**51,360/–** ( ரூபாய் ஐம்பத்தொன்றாயிரத்து முந்நூற்றி அறுபது) ற்கு மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/6243/2018)

அ.கு–

**அ.** செலவுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ஆ.** இப்பணிக்கு ஆகும் செலவுத்தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.723அனுமதிக்கப்பட்டது.**

**3** ) இராஜபாளையம் நகராட்சி பொறியியல் பிரிவு ஈப்பு வாகனம் டி.என்.**67** ஏ.வி 6792 வாகனத்திற்கு புதிதாக **12**v 70 AH பேட்டரி வாங்கும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5800/– ( ரூபாய் ஐயாயிரத்து எண்ணூறு) ற்கு மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (இ2/6459/2018)

அ.கு–

**அ.** மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ஆ.** மேற்படி பணிக்கு ஆகும் செலவுத்தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**இ)** இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.724அனுமதிக்கப்பட்டது.**

**4** ) இந்நகராட்சி பகுதியில் உள்ள 42 வார்டுகளிலும் பன்றிக்காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகாக விழிப்புணர்வு நோட்டீஸ் அச்சடிக்க கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(எச்1/5899/18)

| வ.எண்<br>1 | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி<br>2 | மதிப்பீட்டுத் தொகை<br>3 |
|---|---|---|
| 1. | சிவகாசி பிரிண்டர்ஸ் சர்வீஸ்<br>இண்டஸ்ரியல் சொசைட்டி<br>சிவகாசி | நோட்டீஸ் ஒன்றுக்கு<br>தொகை ரூ 3.00/– |
| 2. | கோவில்பட்டி சிறு தொழில் | நோட்டீஸ் ஒன்றுக்கு<br>தொகை ரூ 3.50/– |

| | | |
|---|---|---|
| | இண்டஸ்ரியல் சர்வீஸ்<br>கோவில்பட்டி | |
| 3. | தூத்துக்குடி மாவட்ட ஹடெக் பிரிண்டிங் பிரஸ்,<br>கோவில்பட்டி | நோட்டீஸ் ஒன்றுக்கு தொகை ரூ 3.60/– |

அ.கு–

**1.** மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணிகளை குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள சிவகாசி பிரிண்டர்ஸ் சர்வீஸ் , சிவகாசி நிறுவனத்தாரருக்கு உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.725அனுமதிக்கப்பட்டது.**

**5)** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் தள்ளுவண்டிகள் 30 பராமரிப்பு பணிகள் மேந்கொள்ள கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

மேற்படி ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..(எச்1/4425/18)

| வ.எண்<br>1 | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி<br>2 | மதிப்பீட்டுத் தொகை<br>3 |
|---|---|---|
| 1. | மதுரை மாவட்ட வேளாண்மைப்பொறியியல் சேவைக் கூட்டுறவு சங்கம் லிமிட்<br>மதுரை | வண்டி ஒன்றுக்கு தொகை ரூ 9000/– |
| 2. | திருமங்கலம் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ்<br>மதுரை | வண்டி ஒன்றுக்கு தொகை ரூ 8900/– |

அ.கு–

**1.** மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணிகளை குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமங்கலம் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ்,மதுரை நிறுவனத்தாரருக்கு வேலை உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.726அனுமதிக்கப்பட்டது.**

**6)** டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு கீழ்க்கண்ட கொசு மருந்துகள் வாங்க உத்தேச செலவுத்தொகை ரூ 9,50,000/– ( ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பதாயிரம்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(எச்1/6445/18)

| | | |
|---|---|---|
| 1) | அபேட் (Temiphase 50 % EC) | 400 லிட்டர் |

| | | |
|---|---|---|
| 2) | டெக்னிக்கல் மாலத்தியன் | 400 லிட்டர் |
| 3) | பைரித்திரம் 2 % Extractor | 300 லிட்டர் |

அ.கு—

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேலே கண்ட கிருமி நாசினி பொருட்கள் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அலுவலக அனுமதிக்கப்பட்டுள்ள நிறுவனத்திலிருந்து முன் அனுமதி பெற்று வாங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.727அனுமதிக்கப்பட்டது.**

**7)** பொது சுகாதாரப்பணிகள் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்கு தேவையான கீழ்க்கண்ட கிருமி நாசினி பொருட்கள் வாங்க உத்தேச செலவுத்தொகை ரூ 3,00,000/— ( ரூபாய் மூன்று லட்சத்திற்கு) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(எச்1/6444/18)

| | | |
|---|---|---|
| 1) | பிளிச்சிங் பவுடர் (Stable 36 %) | 5000 Kg |
| 2) | நீற்றிய சுண்ணாம்பு தூள் | 5000 Kg |
| 3) | பினாயில் (கருப்பு) | 200 லிட்டர் |
| 4) | லைசால் | 100 லிட்டர் |

அ.கு—

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. பொது சுகாதாரப்பணிகள் குறித்தும் , அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.728அனுமதிக்கப்பட்டது.**

**8)** இராஜபாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு செய்ய Liquid chlorination சப்ளை செய்யும் பணிகள் ரூ.6.50 லட்சம் மதிப்பீட்டில் 13.12.2017 முதல் ஸ்ரீகிருஷ்ணா கெமிக்கல்ஸ் ஈரோடு நிறுவனத்தார் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகஸ்ட் மாதம் வரை தொகை முழுவதும் செலவிடப்பட்டது.குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி செப்டம்பர் மாதம் முதல் குளோரின் விநியோகம் செய்தமைக்கான தொகை வழங்கவும் ,

வரும் மார்ச் 2019 மாதம் வரை குளோரின் சப்ளை செய்யும் பணி M/S ஸ்ரீகிருஷ்ணா கெமிக்கல்ஸ் ஈரோடு நிறுவனத்தார் மலம் பணி மேற்கொள்ளவும், அதற்காகும் கூடுதல் உத்தேச செலவினம் ரூ.4,90,000/– (ரூபாய் நான்கு லட்சத்து தொண்ணூராயிரத்திற்கு)மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(இ2/6019/2017)

அ.கு–

**அ.** கூடுதல் செலவின தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ஆ.** மேற்படி பணிக்கு ஆகும் செலவுத்தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.729அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர்/தனி அலுவலர்**
**இராஜபாளையம் நகராட்சி**